பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண் : 05** **நாள்: 04.01.2019**

# பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குள் பிறந்த குழந்தைகளின் பிறப்பு சான்றிதழில் குழந்தையின் பெயரை இணையதளம் மூலம் விண்ணப்பித்து சேர்க்கலாம் என ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 300 குழந்தைகள் பிறக்கின்றனர்.

மேற்படி பிறக்கும் குழந்தைகளுக்கு பிறப்பு சான்றிதழ்களை பெற்றோர்கள் சம்பந்தப்பட்ட மண்டல அலுவலகங்களில் உரிய ஆவணங்களுடன் நேரடியாக சென்று விண்ணப்பித்து பெற்று வந்தனர்.

எனவே, பொதுமக்களின் நலன் கருதி பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளமான "www.chennaicorporation.gov.in"ல் பிறந்த குழந்தைகளுக்கு பெயர் பதிவு செய்வதற்காக ஒரு தனிப்பிரிவு (Child Name Inclusion) உருவாக்கப்பட்டுள்ளது. மேற்படி உருவாக்கப்பட்டுள்ள பிரிவில் பெற்றோர்கள் பிறந்த குழந்தையின் பெயரை ஒருமுறை பதிவேற்றம் செய்தபிறகு, மீண்டும் எக்காரணம் கொண்டும் மாற்ற இயலாது. எனவே, சம்பந்தப்பட்ட உரிய ஆவணங்களுடன் தவறு இல்லாமல் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

பொதுமக்கள் இப்பிறப்பு சான்றிதழ்கள் பெறும் வசதியினை பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் மூலம் உடனடியாக பெற்று பயனடையலாம் என ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**